**தலைப்பு 288 – நில அளவையாளர் நாயகம் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 288 – நில அளவையாளர் நாயகம் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மற்றும் வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 29 ஆந் திகதி நில அளவையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,607.85 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 3,528.86 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 78.99 மில்லியன் அதாவது 2.19 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 3,360.19 | 3,326.86 | 33.33 | 0.99 |
| மூலதனம் | 247.66 | 202.00 | 45.66 | 18.44 |
| மொத்தம் | **3,607.85** | **3,528.86** | **78.99** | **2.19** |

#### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக திணைக்களத்திற்கு காணி அமைச்சினால் ரூபா 250 மில்லியன் கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 249 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 1 மில்லியன் அல்லது 0.4 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 வருமானக் கணக்குகள்

-----------------------------------------

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

--------------------------------------------------------------------------------------

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக 20-03-02-04 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்காக ரூபா 320.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 465.02 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 145.31 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

--------------------------------------------------------------------------------------------

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

---------------------------------------------------------------------------------

திணைக்களத்திற்குரிய 28801 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக காராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறு.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 148.00 | 143.96 | 105.00 | 123.32 | 400.00 | 334.26 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

------------------------------

திணைக்களத்தின் கீழான 7002/0000/00/0044/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 25.18 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 03 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17.22 மில்லியனாக இருந்தது. விபரம் பின்வருமாறு.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0117/000 | 3.26 |
| 6000/0000/00/0013/0077/000 | 3.11 |
| 6000/0000/00/0016/0065/000 | 10.85 |
| மொத்தம் | **17.22** |

## 2.6 கணக்காய்வு அவதானிப்புகள்

நில அளவையாளர் நாயகம் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே காட்டப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் / நிதிப்பிரமாணம் 502(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | மின்சார உபகரணங்கள் தொடர்பாக பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | நட்டங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (உ) | பொருட் பதிவேட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 754 மற்றும் நிதிப்பிரமாணம் 751 (1) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 கட்டாய சேமிப்புகள்

2015 திசெம்பர் 29 ஆந் திகதிய 07/2015 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் இரண்டாம் பந்திக்கமைய கட்டாயமாக சேமிப்பு மேற்கொள்ளப்பட்ட வேண்டிய 02 விடங்களின் ரூபா 7,869,136 தொகை குறித்த சுற்றறிக்கை கட்டளைகளுக்கு புறம்பாக செலவிடப்பட்டிருந்தது.

### 3.2.2 மிகை நிதியேற்பாட்டினை ஏற்படுத்துதல்

35 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தமையின் காரணத்தால், நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னரான ரூபா 63,805,109 கூட்டுத்தொகையான சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 6 சதவீதம் முதல் 57 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.2.3 குறைநிரப்பு மதிப்பீடுகளின் கீழ் ஓதுக்கப்பட்ட பணம்

குறைநிரப்பு ஒதுக்கீட்டின் கீழ் மீண்டெழும் செலவின விடயத்திற்கு ரூபா 27,001,461 தொகையான பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 125,000,000 தொகையான பணம் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயத்திற்கு மாற்றப்பட்டிருந்தது.

### 3.2.4 பொறுப்புக்களை வெளிப்படுத்தல்

ரூபா 212,655 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2.5 நட்டங்கள் மற்றும் கைவிடல்கள்

நட்டங்கள் மற்றும் கைவிடல்களாக வெளிப்படுத்தப்பட்டுள்ள ரூபா 4,274,993 தொகையான கடன் மீதியை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு உரிய அதிகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.3 வருமானக் கணக்கு

20-03-02-04 ஆம் இலக்க நில அளவையாளர் நாயகத்தின் வருமானக் குறியீட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 320 மில்லியன் தொகையான வருமானத்தை சேகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 465 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 25,160 கூட்டுத்தொகையான வருமானம் நான்கு வருடங்களாக நிலுவையாக இருந்தது.

(இ) நில அளவையாளர் நாயகத்தின் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நடப்பாண்டின் போது 15 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்குரிய முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

---

மீளாய்வாண்டிற்குரிய 28801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வறுமாறு.

(அ) அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,967,185 ஆக காணப்பட்ட போதிலும், அவை 01 முதல் 34 வருடங்களுக்கிடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டது. அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) திணைக்களத்தினால் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு ஒவ்வொரு மாதத்தினதும் இறுதியில் சீசீ 10 பதிவேட்டின் மீதிகள் மற்றும் திறைசேரி கணனி அச்சீட்டு மீதிகளுடன் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகள் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) திணைக்களத்தின் அறிக்கைகளுக்கமைய கடன் முற்பணக் கொடுப்பனவுகளை திறைசேரி கணனி அச்சீட்டு குறிப்புகளுடன் ஒப்பிடும்போது ரூபா 104,809 தொகையான வேறுபாடு நிலவியது.

(ஈ) கடன் பெறுவனவுகளின் உள்ளபடியான பெறுமதிகளை திணைக்கள அறிக்கைகள் மற்றும் திறைசேரி கணனி அச்சீடுகளுக்கமைய ரூபா 343,764 தொகையான வேறுபாடொன்று நிலவியது.

(உ) திறைசேரி கணனி அச்சீடுகளுக்கமைய வரவு மீதியின் ஆகக்கூடிய எல்லையின் உள்ளபடியான பெறுமதி மற்றும் மாகாண அலுவலகங்களின் பொழிப்பு அறிக்கை ஆகியவற்றுக்கிடையே உள்ளபடியான பெறுமதியில் ரூபா 93,403 தொகையான வேறுபாடொன்று நிலவியது.

(ஊ) திணைக்களத்தின் உள்ளக இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் அந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளுக்கிடையே ரூபா 1,576,792 தொகையான வேறுபாடொன்று நிலவியது.

(எ) தலைமை அலுவலகத்தினதும் மேல் மாகாண அலுவலகத்தின் கடன் கோவைகளின் மாதிரியொன்றின் பரிசோதனையின் போது, 10 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 946,150 தொகையான இடர்கடன்களுக்குரிய தவணைப்பணம் மற்றும் வட்டி சீசீ 10 பதிவேட்டில் உட்படுத்தப்படாமை, உட்படுத்துவதிலான தாமதங்கள், தவறான உட்புகுத்தல்கள் மற்றும் தவணைகளை அறவிடுவதிலான தாமதங்கள் நிலவின.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| **சொத்துக்களின் வகை** | **அலகுகளின் எண்ணிக்கை** | **விளைவற்று அல்லது குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்ட காலம்** |
|---|---|---|
| கட்டிடங்கள் : | | |
| • தியதலாவ அளவீட்டு மற்றும் வரைபடமாக்கும் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இல்லம் | 23 | 01 முதல் 03 வருடங்கள் வரை |

| | | |
|---|---|---|
| • ஊவா மாகாண நில அளவையாளர் அலுவலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ இல்லம் | 01 | 03 வருடங்கள் |
| • பதுளை சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகரின் உத்தியோகபூர்வ இல்லம் | 01 | 01 வருடம் |

**(ஆ) வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்**

---

(i) காணிகள் அமைச்சின் 16 வாகனங்கள் 2014 ஆம் ஆண்டு முதல் முறையாக சுவீகரிக்கப்படாமல் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தது.

(ii) பிம்சவிய நிதியேற்பாடுகளின் மூலம் ரூபா 312 மில்லியன் செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் உள்ளடங்கலான பல்வேறு மூலதன சொத்துக்கள் மற்றும் ரூபா 82 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள், காணிகள் அமைச்சிடமிருந்து சுவீகரிக்கப்படாமல் பயன்படுத்தப்பட்டவாறு இருந்தது.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

---

திணைக்களத்தால் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தீர்க்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 27,301,262 ஆகும்.

**3.6 இணக்கமின்மைகள்**

---

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

---

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(3) | 754,128 | மீளாய்வாண்டின் போது 11 வாகனங்களுக்கு ஏற்பட்ட அழிவு நட்டம் தொடர்பில் ஆரம்ப நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 104(4) | 315,264 | மீளாய்வாண்டின் போது 04 வாகனங்களுக்கு ஏற்பட்ட அழிவு நட்டங்கள் தொடர்பில் மூன்று மாதங்களினுள் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.7 செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத்திட்டம் ஆகியவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

திணைக்களத்தின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிராததுடன், அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

(i) 2009 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எஞ்சியுள்ள அளவீட்டு கட்டளைகளின் எண்ணிக்கை 18,511 ஆக இருந்ததுடன், கடந்த ஏழு வருடங்களினுள் எஞ்சியுள்ள அளவீட்டுக் கட்டளைகளின் எண்ணிக்கை கிரமமாக அதிகரித்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு காணப்பட்ட மொத்த அளவீட்டு கட்டளைகளின் எண்ணிக்கை 32,924 ஆக இருந்ததுடன், இவற்றுள் 18,413 அளவீட்டு கட்டளைகள் அல்லது மொத்த அளவீட்டு கட்டளைகளின் 49 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(iii) பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டுக் கோரிக்கைகளில் நடப்பாண்டின் இறுதியில் உள்ளபடியாக 18 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(iv) 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலும் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றம் 10 சதவீதமாகும். எனினும், ஊக்குவிப்பு படிகளாக ரூபா 245 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) திட்டமிடல்**

-----------------

அளவையியலாளர் ஒருவரிற்கு மாதமொன்றிற்கு அளக்க வேண்டிய ஆகக்குறைந்த காணித்துண்டுகளின் அளவான 20 (Norms) ஆன அங்கீகரிக்கப்பட்ட அடைவினை தற்போதைய முன்னேற்றமடைந்த தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாட்டினால் அதிகரிக்காது அதன் அடிப்படையில் திட்டமிடப்பட்டமையினால் பௌதீக செயலாற்றல் 200 சதவீதமான அதிகரிப்பொன்றினை காட்டியிருந்தது.

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------

திணைக்களத்தினால் மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறு.

### 3.8.1 அரச கொள்வனவு வழிகாட்டல் கோவையிலிருந்து விலகிச் செயற்படுதல்

#### (அ) பெறுகைகள் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

(i) பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 15.22 மில்லியன் பெறுமதியான கொள்வனவுகள் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிராததுடன், பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 8.68 மில்லியன் பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) பெறுகைகள் திட்டத்தின் 05 பொருட்கள் மற்றும் உபகரண வகைகளுக்காக ரூபா 9.80 மில்லியன் மற்றும் கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 19.54 மில்லியன் தொகையான மிகை மதிப்பீடொன்றுடன் தயாரிக்கப்பட்டிருந்தது.

(iii) பெறுகைகள் திட்டத்தில் 09 வகையான பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்காக ரூபா 5.68 மில்லியன் தொகையான குறை மதிப்பீடொன்றுடன் தயாரிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) சுற்றுலா விடுதிகள் மற்றும் நில அளவையாளர் திணைக்களங்களை நிர்மாணித்தல்

ரூபா 60.19 மில்லியன் செலவினத்துடன் திருகோணமலை, வவுனியா, மற்றும் கெக்கிராவை ஆகிய நில அளவையாளர் அலுவலகங்கள் மற்றும் குச்சவெளி சுற்றுலா விடுதி மற்றும் அதன் நீர்த்தொட்டியை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் கீழ் அவதானிக்கப்பட்ட பிரதானமாக விடங்கள் பின்வருமாறு.

(i) இந்த நிர்மாணங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வேலைகளின் அளவினை மிகைத்து கொடுப்பனவு செய்தல், பூர்த்தி செய்யப்படாத பணிகளுக்கான கொடுப்பனவு செய்தல், மதிப்பீட்டுத் தொகையினை மிகைத்து கொடுப்பனவு செய்தல் மற்றும் மதிப்பீடுகளில் குறிப்பிடப்படாத விடயங்களுக்காக ரூபா 8.24 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மொத்த கிரய மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட ரேட்களின் (BSR) விலைகளுக்கமைய தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளின் அளவாக காணப்படும்

பதிவேடுகளை தயாரிக்காமை, மதிப்பீடுகளில் சில விடயங்கள் தேவையான அளவினை மிகைத்து உள்ளடக்கப்படுதல், தண்டப்பணம் தொடர்பில் திணைக்களத்திற்கு பாதகமான முறையில் தண்டப்பணத்தை கணிப்பிடல் போன்ற பல்வேறு அடிப்படை குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(iii) ஒப்பந்ததாரரின் முன் தகைமைகளை முறையாக பரிசோதிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த கூறுவிலைகள் தொடர்பில் முறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட ஆகக்குறைந்த கூறுவிலைகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கூறுவிலைகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 3.47 மில்லியன் தொகையான பாதகமான விலகலொன்று அவதானிக்கப்பட்டது.

(iv) 2016 ஒக்தோபர் 12 ஆந் திகதி வவுனியா மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தின் நிர்மாண நடவடிக்கைகளை பௌதீக ரீதியாக பரிசோதனை செய்யும் போது, கதவு யன்னல்கள், தரைக்கு கொங்கிறீட் இடல், நீர்க்குழாய் மற்றும் கழிவு நீர் கட்டமைப்பினை இழைத்தல் மற்றும் கூரையை முடிவுறுத்தல் போன்ற எந்த பணிகளும் முடிவுறுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது. மேலும், அத் திகதியில் உள்ளபடியாக பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பகுதிகளாக குறிப்பிட்டு ரூபா 3.06 மில்லியன் தொகை ஒப்பந்தகாரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

(v) திருகோணமலை மாவட்டத்தின் நில அளவையாளர் அலுவலகம் மற்றும் குச்சவெளி சுற்றுலா விடுதியில் 74 தன்னியக்க கதவுகள் பொருத்தப்படாமல் ரூபா 444,000 தொகை கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. கழிவு நீர் குழாய்களை உரிய நியமமின்றி பூர்த்தி செய்தல், ஈடுபடுத்த வேண்டிய செங்கற்களுக்காக குறைந்த தரமுடைய செங்கற்களை பயன்படுத்தல், யன்னல்களை மற்றும் இடைத் தடுப்புக்களுக்காக குறைந்த நியமத்திலான கண்ணாடிகளை பொருத்துதல் போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக சுற்றுலா விடுதியின் அளவிடைப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டிருந்த கம்பிகளில் அளவினை விட கூடுதலான கம்பிகளை இட்டு குறித்த கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

**(இ) தியதலாவ அளவிடைகளை வரைபடமாக்கும் அலவலகத்தின் பழுதுபார்த்தல்**

---

மீளாய்வாண்டினுள் தியதலாவ அளவிடைகள் மற்றும் வரைபடமாக்கும் நிறுவனத்திற்குரிய வீதியொன்றினதும் கராஜினதும் பழுதுபார்த்தல்களுக்காக ரூபா 985,005 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த ஒப்பந்தங்களுக்குரிய மதிப்பீடுகளுக்கிணங்க உரிய தொழில்நுட்ப ஆலோசனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படாமையின் காரணத்தால் தோல்வியுற்றிருந்தது.

**(ஈ) அளவு மானிகள் மற்றும் உரிய உபகரணங்களை கொள்வனவு செய்தல்**

---

மீளாய்வாண்டின் போது செயலாற்றலினை அதிகரிக்கும் நோக்கத்திற்காக ரூபா 46.39 மில்லியன் தொகையான செலவினத்தில் 25 அளவு மானிகள் , 189 Hand Held GPS மற்றும் 165 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இத்தாலியில் தயாரிக்கப்பட்ட உயர் தரத்திலான அளவு மானிகள் எனும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தவறான பரிந்துரையொன்றின் அடிப்படையில் அந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இதன் காரணமாக வருடமொன்றிற்கு குறைவான காலப்பகுதியினுள் பல்வேறு தொழில்நுட்ப கோளாறுகள் ஏற்பட்டிருந்தன. மேலும், அமைப்புக் குறிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு மடி கணனிகளை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய ஏனைய அவதானிப்புகள் பின்வருமாறு.

(i) Hand held GPS களை கொள்வனவு செய்யும் போது போதியளவான முத்திரையிடப்பட்ட கூறுவிலைகளை கோராமல் பெறுகைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) மடி கணனிகள் மற்றும் மேசைக் கணனிகளுக்காக ஆகக் குறைந்த கூறுவிலையினை சமர்ப்பித்திருந்த விலைக்கேள்வயாளர்கள் தெரிவு செய்யப்பட்டமையின் பின்னர், அந்த விலைக்கேள்வியாளர்களுக்கு பதிலளித்தல் தவிர்க்கப்பட்டிருந்தது. இந்த விலைக் கேள்வியாளர்களிடமிருந்து ரூபா 152,000 தொகையான விலைக்கேள்வி பிணைகளை அரசுடமையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) CORS கட்டமைப்பினை தாபித்தல்**

**-------------------------------------------------------------**

முழு இலங்கையையும் உள்ளடங்கும் வகையில் CORS எனும் பெயரிலான 40 கட்டமைப்புக்கள் தேவைப்பட்டது. எனினும், மீளாய்வாண்டின் போது ரூபா 30.46 மில்லியன் செலவில் Proposed Continuously Operating Reference Station Network (CORS) கட்டுப்பாட்டு முறைமைகள் 06 மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்தன.

இந்த முழு செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 200 மில்லியனுக்கு அதிகமான போதிலும், இதற்காக சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த செயற்திட்டத்திற்குரிய கொள்வனவு நடவடிக்கைகள் உரிய முறையில் திட்டமிடப்பட்டிராமையால் அதனை தாபிப்பதற்கு 02 வருட தாமதம் ஏற்பட்டிருந்தது. இதற்காக கூறுவிலைகளை கோரும்போது தேசிய அடிப்படையிலான போட்டி முறைமை பின்னர் இரட்டை உறை முறைமையாக மாற்றப்பட்டிருந்ததுடன், அமைப்புக்குறிப்பீடுகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதனை அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் முறையாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் விலைக்கேள்விகளை மதிப்பீடு செய்யும் போது, காரணங்களின்றி சில விலைக்கேள்விகள் புறக்கணிக்கப்பட்டிருந்ததுடன், உடன்படிக்கையில் தாமதத்திற்கான தண்டப்பணம் தொடர்பான நிதியேற்பாடுகள் உள்ளடக்கப்படாமையால், ஒப்பந்த நிறைவேற்றம் தாமதப்படுத்தப்பட்டுள்ள 10 மாத காலப்பகுதிக்காக தாமத கட்டணத்தை அறவிடமுடியாது போயிருந்தது.

**(ஊ) ஏனைய அவதானிப்புக்கள்**

**------------------------------------------**

(i) மீளாய்வாண்டின் போது ரூபா 3.39 மில்லியன் செலவில் 07 வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்காக கூறுவிலைகளைப் பெற்றுக்கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு முரணாக நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அவற்றுள் 03 வாகனங்களை மீளக் கையளிப்பதற்கு 05 மாதங்கள் தாமதிக்கப்பட்டிருந்து. பழுதுபார்த்தல்களுக்காக அனுப்பப்பட்டிருந்த இந்த வாகனங்களின் பழுதுபார்த்தல் செலவினங்கள் தகுதிவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) திருகோணமலை மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்தில் பல்வேறு வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக ரூபா 1.62 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், விலைக்கேள்வியினை பெற்றுக்கொள்ளல், திருத்தல் மற்றும் மதிப்பிடல் ஆகியன சுயாதீனத்துடனும் பக்கச்சார்பின்றியும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) அவ்வாறே திருகோணமலை மாவட்ட நில அளவையாளர் அலுவலகத்திற்காக ரூபா 469,597 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களினை கொள்வனவு செய்யும் போது அமைப்புக் குறிப்பீடுகளை தயாரித்து விலைக்கேள்வியாளர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டிராதமையால் பாரிய விலை விலைகளுடனான விலைக்கேள்விகள் கிடைத்திருந்தன.

(iv) ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், நுவரெலியா மாவட்ட நில அளவையாளர் அலுவலகங்கள் மற்றும் அளவைகள் மற்றும் படவரைவு நிறுவனம் போன்ற அலுவலகங்களின் கொள்வனவுக்காக ரூபா 3.75 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இதற்காக போட்டி அடிப்படையிலான கூறுவிலை கோரல் முறைமை பின்பற்றப்படாமல், விலைக்கேள்வியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், விலைக் கேள்விகளை திறக்கும் போதும் மதிப்பாய்வு செய்யும் போதும் போதியளவான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பிடிகாசு வைக்கப்பட்டிருக்காததுடன், கறையான்களை அழிக்கும் வழிமுறைகளுக்காக ரூபா 300,360 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அதற்கான உத்தரவாத சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஊக்குவிப்பு படிகளுக்காக முறையே ரூபா 12,490,598 மற்றும் ரூபா 52,301,234 படியாக ரூபா 64,791,832 கூட்டுத்தொகை நிறுவனத்தின் பணிப்பாளரின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது.

### 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது சிக்கனமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

(அ) தேவையினை சரியாக இனங்காணாமல் ரூபா 5.64 மில்லியன் பெறுமதியான லிதோ கடதாசிகள் மற்றும் வேறு இரு வகையான கடதாசி வகைகள் 2015 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பல்வேறு சேதங்களுக்கு உட்பட்டு 97 சதவீதமான அளவு மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்தது.

(ஆ) சுமார் 15 வருடங்களுக்கு தேவைப்பாடின்றி கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி வெளிப்படுத்தப்படாத 17 டயர்கள் மற்றும் 64 ரீயூப்கள் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன், அவை பாவனைக்கு உகந்த நிலையில் காணப்படவில்லை.

### 3.10 முகாமைத்துவ பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமை**

திணைக்களத்தின் ஊக்குவிப்பு படிகள் செலுத்தும் போது நில அளவையாளர் ஒருவர் மாதாந்தம் நிறைவேற்றப்படவேண்டிய ஆகக்குறைந்த வேலைகளின் அளவு (Monthly Norms) தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒரு மாதத்திற்கு ஊக்குவிப்பு படிகள் செலுத்துவதற்காக செய்யப்பட வேண்டிய உச்ச அளவான காணித்துண்டுகளின் எண்ணிக்கை அல்லது தொடக்கச் சம்பளத்தின் சதவீதமாகச் செலுத்தக்கூடிய எல்லை தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டுவரை ஊக்குவிப்பு படியும் மேற்பார்வைக் கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டில் மாத்திரம் ஊக்குவிப்பு படியும் மேற்பார்வைக் கட்டணமுமாக ரூபா 128.69 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. சில சந்தர்ப்பங்களில் அவர்களின் வருடாந்த அடிப்படைச் சம்பளத்தை மிகைத்து ஊக்குவிப்பு படியும் மேற்பார்வைக் கட்டணமும் செலுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு**

---------------------------------------

நான்கு களஞ்சியங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கட்டிடப் பொருள் களஞ்சியத்தின் கிரமமற்ற நிலை காரணமாக அனைத்து இருப்பு விடயங்களையும் கணிப்பிட முடியாதிருந்தது.

(ii) 146 பொருள் விடயங்களின் 4285 பொருள் உருப்படிகளின் பற்றாக்குறையொன்றினைப் போன்றே, 237 பொருள் வடயங்களுக்குரிய 17715 பொருள் உருப்படிகளின் மிகையொன்றும் நிலவியது.

(iii) இரண்டு தலைமைக் களஞ்சியங்களிலிருந்து விநியோகிக்கப்பட்ட 84 பொருள் விடயங்களின் 9858 பொருள் விடயங்களைப் போன்றே, ஒரு களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த 157 பொருள் உருப்படிகள் இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மூன்று பிரதான களஞ்சியங்களின் 173 பொருள் விடயங்களின் 10311 பொருள் உருப்படிகள் காலாவதியான அல்லது விநியோகிக்கப்படாத உருப்படிகளாகும்.

(iv) பல்வேறு களஞ்சியங்களில் முன்னைய ஆண்டிலும் நடப்பாண்டிலும் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த மெய்மையாய்வுகளிலும், பற்றாக்குறையோ மிகையோ இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் அதிக பெறுமதியையுடைய 493 அளவீட்டு இயந்திர வகைகள் காணப்படும் களஞ்சியத்தில் தொல்பொருள் பெறுமதி வாய்ந்த மிகவும் பழமையான அளவீட்டு இயந்திரங்களும் காணப்படுவதுடன், இந்த உபகரணங்களில் 278 பொருள் உருப்படிகளின் பற்றாக்குறையொன்றும் அவதானிக்கப்பட்டது. இந்த களஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள உபகரணங்கள் கிரமமாக ஒழுங்குபடுத்தப்பட்டிராததுடன், சுத்தமும் குறைவான மட்டத்தில் நிலவயது.

(v) நலன்புரிக் களஞ்சியத்தின் 139 பொருள் உருப்படிகள் அதற்கு முன்னைய வருடங்களில் கிடைத்திருந்த போதிலும், அவை இருப்புப் பேரேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) சுமார் 690 பொருள் வகைகள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள களஞ்சியக் கட்டிடத்தில் போதியளவான இடவசதி இல்லாதிருந்தமையால், சில பொருள் விடயங்கள் சிதைந்து போயிருந்தன.

(vii) மூன்று களஞ்சியங்களின் களஞ்சியப் பொறுப்பாளராக சேவையாற்றிய உத்தியோகத்தரொருவர், சுமார் 20 வருடங்களாக களஞ்சியப் பொறுப்பாளராக ஈடுபடுத்தப்பட்டிருந்தார். அந்த உத்தியோகத்தர் அங்கீகாரமின்றி 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 53 விடுமுறைகள் பெற்றுக்கொண்டிருந்தனர். 2016 ஆம் ஆண்டில் சம்பளமற்ற விடுமுறைகள் உள்ளடங்கலாக மொத்தமாக 83 ½ விடுமுறைகளை பெற்றுக்கொண்டிருந்தார். இவ்வாறு விடுமுறை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. களஞ்சியக் கட்டுப்பாட்டில் அவதானிக்கப்பட்ட மேற்படி நலிவுகளுக்கு இந்நிலமை நேரடியாக தாக்கமளித்திருந்தது.

**(இ) ஏனைய அவதானிப்புக்கள்**

(i) கடுமான சுற்றுலா விடுதியின் கராஜ் சுமார் 4 வருடங்களுக்கு அண்மிய காலமாக கூரை, யன்னல் மற்றும் உடைந்த பொருட்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தமையால் பயன்படுத்தப்பட முடியாத நிலமைக்கு உள்ளாகியிருந்தது. தியதலாவ அளவை மற்றும் வரைபடமாக்கும் நிறுவனத்தின் 2646 பொருள் உருப்படிகளை கைதவிர்ப்பு செய்து அரச வருமானமொன்றினை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தியத்தலாவ அளவை மற்றும் வரைபடமாக்கும் நிறுவனத்தின் வாசிகசாலையில் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணிகளுக்கு 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு முன்பிருந்து இரவலாக கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 52,943 பெறுமதியான 83 புத்தகங்கள் 2017 சனவரி 27 திகதி வரையிலும் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அலுவலகமொன்றிற்கு பொருத்தமற்ற கட்டிடமொன்றில் பண்டாரவளை பிரதேச நில அளவையாளர் அலுவலகம் நடாத்திச் செல்லப்படுவதுடன், இந்தக் கட்டிடம் வருடமொன்றிற்கு ரூபா 216,000 தொகைக்கு இரண்டு

வருட காலப்பகுதிக்காக வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1,139 | 995 | 144 |
| (ii) | மூன்றாம் நிலை | 83 | 60 | 23 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,345 | 967 | 378 |
| (iv) | ஆரம்ப நிலை | 4,853 | 3,883 | 970 |
| | **மொத்தம்** | 7,420 | 5,905 | 1,515 |

(ஆ) திணைக்களத்தில் தற்போது நவீன தொழில்நுட்ப உபகரணங்கள், கணனி மென்பொருட்கள் மற்றும் GPS தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், 4154 எண்ணிக்கையான அளவீட்டு உதவியாளர் பதவிகளை மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 695 அளவீட்டு உதவியாளர்கள் அந்த கடமைக்கு புறம்பாக கனிஷ்ட மட்டத்திலான வேறு பணிகளை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஈ) 2013 ஆம் ஆண்டின் பின்னர் அளவீட்டு கள உதவியாளர் பதவிகளுக்காக 123 பெண்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த கடமைகளை பெண்களுக்கு நிறைவேற்றுதல் சிரமமாகையால், அதன் அடிப்படையில் அவர்கள் அலுவலகம் மற்றும் ஏனைய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.